**செ.வெ.எண்: 10** **நாள்: 05.09.2021**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஊரகம் மற்றும் நகர்புறப் பகுதிகளில் அரசு மற்றும் தனியாருக்குச் சொந்தமான இடங்கள் மற்றும் சாலை ஓரங்களில் அமைக்கப்பட்டுள்ள அனுமதி பெற்ற / அனுமதி பெறாத விளம்பர பலகைகள், பதாகைகள், ஃபிளக்ஸ் பேனர்கள் இவற்றின் காரணமாக பொதுமக்கள் பாதசாரிகள், இரண்டு சக்கர வாகனங்கள் போக்குவரத்திற்கு பெரும் இடையூராகவும், ஆபத்தாகவும் உள்ளது.

இவ்வாறான விளம்பர பலகைகளை அகற்றுவதற்கு மாவட்ட அளவில் ஊரக வளர்ச்சித்துறை திட்ட இயக்குநர், வருவாய்த்துறை கோட்டாட்சியர்கள் மற்றும் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் இணைந்து கண்காணிப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட உள்ளார்கள்.

இவ்வாறான விளம்பர பலகைகள் மாவட்ட அளவில் பட்டியல் தயார் செய்யப்பட்டு உடனடியாக அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அனுமதி பெறாத விளம்பர பலகைகள் அதன் அடிகட்டுமானம் மற்றும் மரத்திலான தாங்கிகள் அனைத்தும் முழுவதுமாக அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

அனுமதி பெற்ற இனங்கள் அனைத்தும் உரிய காலக்கெடு உரிமம், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் உள்ளதா என கண்காணிக்கப்படும். இனிவரும் காலங்களில் அனுமதி பெறாமல் எந்த ஒரு விளம்பர பலகைகளும் நிறுவப்படக் கூடாது. தவறும் பட்சத்தில் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**